தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **09.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 13802/SCIC/2022</u>

திரு.மு.லோகநாதன் த/பெ. ர. முருகேசன்
தலைவாசல் காம்ப்ளக்ஸ் — மேல்முறையீட்டாளர்
3வது தளம், 525 கிராஸ் கட் ரோடு,
கோயம்புத்தூர் - 641 012.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மி.க.சார்புச் செயலாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
பொது (மி.க.)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 30.05.2022 |
| 2. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 06.06.2022 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.06.2022 |
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 25.06.2022 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 20.07.2022 |
| 6. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 01.08.2022 |
| 7. | ஆணையத்தின் அறிவிப்பு | 28.09.2022 |
| 8 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 04.11.2022 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / அரசு சார்புச் செயலாளர், பொதுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “தூத்துக்குடியில் 22/05/2018 அன்று ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, ஏற்பட்ட வன்முறையின் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, காயங்கள் குறித்தும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் விசாரிப்பதற்காக தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் சமர்ப்பித்த விசாரணை அறிக்கையின் நகலை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.இரா.மீனாட்சி சுந்தரி, மி.க.சார்புச் செயலாளர், பொது (மி.க.)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே 13/06/2022 மற்றும் 20/07/2022 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 04/11/2022 தேதியிட்டு, தனது ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார். மனுதாரர், தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு பற்றிய நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்கள், முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்த அறிக்கையின் நகலை வழங்க வேண்டுமென்று கோரினார். அதற்கு, பொதுத் தகவல் அலுவலர், பொது (மி.க.)த் துறை, அரசு ஆணை எண்.1045-ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழ் தகவல் அளிப்பதிலிருந்து விலக்கு பெற்றது என விவரித்தார். மனுதாரர், மேற்குறிப்பிட்ட சம்பவம் மனித உரிமை மீறல் தொடர்புடையது, எனவே அறிக்கை தனக்கு வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியதோடு ஏற்கனவே அந்த அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் கூற்றினை ஏற்றுக் கொண்டதோடு, அவ்வறிக்கை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மி.க.சார்புச் செயலாளர், பொது (மி.க.)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் மேற்குறிப்பிட்ட அறிக்கை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இணைய தள முகவரியை உடனடியாக மனுதாரருக்கு தெரிவிக்குமாறும், அதன் பின் மனுதாரர், மேற்சொன்ன அறிக்கையினை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13802/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மி.க.சார்புச் செயலாளர்
பொது (மி.க.)த் துறை, தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

**மேல்முறையீட்டாளர்**

திரு.மு.லோகநாதன் த/பெ. ர. முருகேசன்
தலைவாசல் காம்ப்ளக்ஸ்
3வது தளம், 525 கிராஸ் கட் ரோடு,
கோயம்புத்தூர் - 641 012.

RG/PC